செய்தி வெளியீடு எண்: 155 நாள்: 21.02.2020

# செய்தி வெளியீடு
# அகரமுதலி இயக்ககம் சார்பில் "வணிக நிறுவனங்களில் தூய தமிழ்த் திட்டம்" மாணவர் நகலகம் தொடங்கியது !

உலக தாய்மொழி நாளான இன்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தில் தமிழ்க் கலைக்கழகத்தின் 56ஆவது கூட்டம் காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை அகரமுதலித் திட்ட இயக்ககத்திலும் பிற்பகல் 2.00 மணியளவில் அடையாறு பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள மாணவர் நகலகத்தில் "வணிக நிறுவனங்களில் தூயதமிழ்த் திட்டம்" தொடக்க விழாவும் நடைபெற்றன. விழாவில் அகரமுதலி இயக்குநர் திரு தங்க. காமராசு தனது அறிமுகவுரையில் பிறமொழிக்கலப்பு இல்லாமல் தூயதமிழில் பேசும் அடித்தட்டு மக்களையும் ஊக்குவிக்கும் வகையில் இவ்வியக்ககத்தின் சார்பில் தூயதமிழ்ப் பற்றாளர் பரிசுத் திட்டம் அறிவிக்கப்பட்டு பேருந்து நடத்துநர், பள்ளி இரவுக் காவலர், கல்லூரி மாணவர், காய்கறி விற்பனையாளர் உள்ளிட்ட பலர் இப்பரிசுக்கு விண்ணப்பித்துள்ளனர். இத்திட்டத்தை உலகம் முழுவதிலிருந்தும் ஆயிரக்கணக்கானோர் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். அகரமுதலித் திட்ட இயக்ககம் அறிவிக்கும் திட்டங்களின் வரிசையில் தற்போது 'வணிக நிறுவனங்களில் தூயதமிழ்த் திட்டமும்' சேர்ந்துள்ளது என்று தெரிவித்தார். உலகத் தாய்மொழி நாளில் அடையாறு மாணவர் நகலகக்குழுமத்தில் தொடங்கும் இத்திட்டம் அடுத்த ஆண்டுக்குள் குறைந்தது 100 நிறுவனங்களிலாவது பரவும் என்று நம்புவதாகத் தெரிவித்தார். தமிழ்க் கலைக்கழகம் உருவாக்கும் கலைச்சொற்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரும் களமாக மாணவர் நகலகம் விளங்குகிறது என்றும் தெரிவித்தார்.

அடையாறு மாணவர் நகலகக் குழுமத்தின் நிருவாக இயக்குநர் திரு. சா.அ.சௌரிராசன் அவர்கள் தனது தலைமையுரையில், 'வணிக நிறுவனங்களில் தூயதமிழ்த் திட்டத்திற்கான தொடக்கப் புள்ளியாக மாணவர் நகலகத்தைத் தேர்ந்தெடுத்ததற்குப் பெருமையுடன் நன்றி கூறுவதாகத் தெரிவித்தார். Mouse என்பதற்குச் சுட்டி என்றும் Browsing என்பதற்கு உலாவி என்றும் கலைச்சொல்லாக்கம் செய்ததில் தன்னுடைய பங்கும் இருப்பதை நினைவுகூர்ந்தார். தங்கள் துறைசார்ந்த சொற்களுக்கான கலைச்சொற்களைத் தொகுத்துப் பணியாளர்களும் வாடிக்கையாளர்களும் பயன்கொள்ளும் வகையில் சிறு வெளியீடாக வழங்க ஆர்வமாக உள்ளதாகவும், இதேபோன்று பல்வேறு துறை சார்ந்த கலைச்சொற்களையும் துறைசார்ந்தவர்களிடமிருந்து பெற்று கலைச்சொல்லாக்கம் செய்து சிறுசிறு வெளியீடுகளாக அகரமுதலி இயக்ககம் வெளியிட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்தார். HighTidal என்பதனை ஏத்தம் என்றும் LowTidal என்பதனை வத்தம் என்றும் குறிப்பிடும் மீனவர்கள், டால்பினை வேடன்மீன் என்றும் திமிங்கலத்தை பனுவன்மீன் என்றும் குறிப்பிடுகின்றனர். இத்தகைய சொற்களையெல்லாம் பதிந்து

புழக்கத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று தெரிவித்தார். சொற்கள் அழிந்தால் அதற்குப் பின்னால் இருக்கிற அறிவியில் அறிவும் தொலைந்து விடும் என்று தெரிவித்தார். ஒவ்வொரு மாதமும் 21 ஆம் நாள் மாணவர் நகலகக்கிளைகளில் வாடிக்கையாளர்களிடம் பணியாளர்கள் தூய தமிழில் பேசுவார்கள் என்று நிருவாக இயக்குநர் திரு.ச.அ.சௌரிராசன் தெரிவித்தார். அகரமுதலி இயக்ககம் செய்துவரும் தமிழுக்கான ஆக்கப்பணிக்குப் பயன்பட தாங்கள் ஆர்வத்துடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து பேசிய கவிஞரும் எழுத்தாளருமான திரு. ஜெயபாஸ்கரன் அவர்கள், தேவைதான் கண்டுபிடிப்பின் தாய் என்றும் தூயதமிழ்க் கலைச்சொற்கள் இன்றைய காலத்தின் தேவை என்றும் அதனை இவ்வியக்ககம் நிறைவேற்றி வருகிறது என்றும் தெரிவித்தார். உலகில் தற்போது 7200 மொழிகள் உள்ளன என்றும் அவற்றுள் 10கோடி பேருக்குமேல் பேசப்படும் மொழிகள் 13 என்றும், அந்த 13 மொழிகளில் தமிழ் ஒன்று என்றும் தெரிவித்தார். தமிழ் தொன்மையும் சிறப்பும் வாய்ந்ததாக இருந்தாலும் மற்ற 12 மொழிகளுக்கு இருக்கும் அதிகாரமும் மதிப்பும் தமிழுக்கு இல்லாத நிலையே உள்ளது என்றும் இதனை மாற்றிட மொழிக்கலப்பைத் தவிர்க்க வேண்டுமென்றும் தெரிவித்தார். மொழியால் மட்டுமே நாம் ஒன்றிணைய முடியும் என்று தெரிவித்தார்.

விழாவில் அகரமுதலித் திட்ட இயக்ககம் ‘‘வணிக நிறுவனங்களில் தூயதமிழ்த் திட்டத்தின்’’ செயலாக்கத்தை அடையாறு மாணவர் நகலகக் குழுமத்திடம் அறிக்கையாகவும் உடன்படிக்கையாகவும் வழங்கியது. விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக பிரான்சு தமிழ்ச் சங்கத்தின் பொருளாளர் திரு.கோகுலன் கருணாகரன், மாணவர் நகலக மேலாளர் திரு. நாகராஜன், பத்திரிகையாளர்– எழுத்தாளர் திரு.பொன்சீ, டிஸ்கவரி புக்பேலஸ் பதிப்பாளர் திரு.வேடியப்பன், திரு.அமுதன், தமிழ்க் கலைக்கழகத்தின் அலுவல்சார் அலுவல்சாரா உறுப்பினர்கள், மதிப்புறு உறுப்பினர்கள், மாணவர்கள் நகலக பணியாளர்கள், அறிஞர்கள், சைதாப்பேட்டை கல்வியியல் கல்லூரி மாணவர்கள், மற்றும் பொது மக்கள் உள்ளிட்டோர் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர் தமிழ்க் கலைக்கழகக் கூட்டத்தில் 550 கலைச்சொற்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, அவற்றுள் 436 சொற்கள் ஏற்பளிக்கப்பட்டன

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**